திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திரு.எஸ்.ஜோசப் ஆரோக்கியராஜ்,

ந.க.எண் : 4047/2019/ஊ.வ.1

நாள் :06.03.2020

பொருள் : பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - திண்டுக்கல் மாவட்டம் - ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக்காவலர் / ஊரக மகளிர் நல அமைப்பாளர் ஆகியோர்களுக்கான 2018-2019 ஆம் ஆண்டு - காலிப்பணியிடங்களில் 10 சதவீத இடஒதுக்கீடு - தேர்வாணையத்தின் இசைவு பெறப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்.

பார்வை :
1. அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ7) துறை கடித (2ப) எண்.103 நாள11.06.2019
2. திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்:4047/2019/ஊ.வ.1 நாள்: 28.06.2019
3. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், கடித ந.க.எண்:266/2020/அ1 நாள்:11.02.2020.
4. தனியரின் பணிப்பதிவேடு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

*********

ஆணை:

திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் 2018-2019 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் / காசாளர் / ஊர்நல அலுவலர் நிலை - II-ல் உள்ள மொத்தம் கணக்கிடப்பட்ட காலிப்பணியிடங்களில் ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலர் / ஊரக மகளிர் நல அமைப்பாளர் ஆகியோர்களுக்கான 10 விழுக்காடு இடஒதுக்கீடு அடிப்படையில் இரண்டு அலுவலக உதவியாளர்களுக்கு பணிமாற்றத்தின் மூலம் இள்நிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்க,. 1954 ஆம் ஆண்டைய தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளின், ஒழுங்கு முறை விதி 16 (பி) பிற்பகுதியின் கீழ், தேர்வாணையம் தனது இசைவினை தெரிவித்துள்ளதாக பார்வை(1)இல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட அரசு கடிதத்தின் அடிப்படையில் தேர்வாணயம் இசைவு வழங்கிய ஒரு அலுவலக உதவியாளர் பணிமாற்றத்தின் மூலம் இளநிலை உதவியாளராக பார்வை(2)இல் காணும் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

D:\RD\RD.1 (c) August 2013 to Till date\Appointment 10 %\Proc\4047-2019 lakshmanan.doc

பார்வை(3)இல் காணும் சார்நிலை அலுவலரிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவின் அடிப்படையில் தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் அவருக்கெதிரே குறிப்பிடப்பட்ட நாள் முதல் கீழ்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் / பதவி / அலுவலகம் (திருவாளர்கள்) | இளநிலை உதவியாளர் நிலையில் பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1 | ரெ.லெட்சுமணன்,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>கொடைக்கானல். | 29.06.2019 மு.ப |

தனியரின் பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து 3 ஆண்டுகள் பணிக்காலத்தில் 2 ஆண்டுகள் தொடர் பணிக்காலம் தகுதிகாண் பருவ காலமாக கருதப்படும். தகுதிகாண் பருவ காலத்திற்குள் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியை முடித்திட வேண்டும். தகுதிகாண்பருவம் நிறைவு செய்வதற்கான தகுதிகளை 5 ஆண்டுகளுக்குள் பெறவில்லையெனில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.

மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய அலுவலகத் தலைமையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6.3.2020

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),
திண்டுக்கல்.

6.3.20

பெறுநர் :-

தொடர்புடையோர் (உரிய வழிமுறையாக)

நகல் :-
1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ஊராட்சி ஒன்றியம், கொடைக்கானல்.
2. ஊ.வ.1 இருப்பு கோப்பிற்கு

D:\RD1\RD.1 (e) August 2013 to Till date\Appointment 10 %\Proc\4047-2019 lakshmanan.doc